IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 313/2023

**P.W.1**

| | |
|---|---|
| Name | : திரு. சந்திரன் |
| Father/Husband Name | : |
| Place | : |
| Calling | : |
| Age | : 76 |

| | |
|---|---|
| Date | : 12-11-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

**<u>1, 2 மற்றும் 11 வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

8. சபரிநாதன் எனக்கு என்ன உறவு என்றால் எனது மகன். எனக்கு ஒரு மகன் தான். அவர் என்னுடைய தத்து மகனா அல்லது என்னுடைய மகனா என்றால் எனது மகன் தான். என்னுடைய செட்டில்மெண்ட் ஆவணத்தில் அவர் என்னுடைய மகன் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் சேர்த்துள்ளேன் என்றால் இல்லை. சபரிநாதன் என்னுடைய வளர்ப்பு மகன் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் என்னுடைய அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் உறவின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. சபரிநாதன் என்னுடைய மகன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

9. நான் வா.சா.ஆ.4 எழுதுவதற்கு முன்பாக உரிமையியல் வழக்கறிஞர் யாரையாவது கலந்து ஆலோசித்து எழுதினேனா என்றால் இல்லை. ஏன் கலந்த ஆலோசிக்கவில்லை என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. கன்னியப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து நான் கிரையம் வாங்காத சொத்து சம்பந்தமாக வா.சா.ஆ.4 ஆவணத்தில் சேர்த்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தவறாக தாவா சொத்தை வா.சா.ஆ.4 ல் சேர்த்துள்ளேன் என்றால் தெரியாமல் சேர்த்து விட்டேன். நான் கிரையம் வாங்காத சொத்து சம்பந்தமாக என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி நான் தாவா சொத்திற்கும் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முத்துமாணிக்கம் என்பவருக்கு 2012 ஆம் ஆண்டு தாவா சொத்தை குத்தகைக்கு கொடுத்ததாக என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் 2008 ஆம் ஆண்டு குத்தகைக்கு விட்டு விட்டேன்.

10. அந்த விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. முத்து மாணிக்கத்தை எனக்கு எப்போதிலிருந்து தெரியும் என்றால் 2000 ஆண்டில் இருந்தே தெரியும். அவரை எவ்வாறு தெரியும் என்றால் ஒரே கிராமம் தான். என்னுடைய நிலத்தின் அருகில் அவரது நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அவருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா கிராமத்தில் முத்து மாணிக்கத்திற்கு மூன்று ஏக்கர் நிலம் உள்ளது என்றாலும் எனவே அவர் என்னிடம் குத்தகைக்கு நிலத்தை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் அவர் ஏற்கனவே

கந்தசாமி முருகன் கோவில் 5 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து வருகிறார் என்றாலும் அவ்வாறுதான் என்னிடமும் குத்தகைக்கு வாங்கிக் கொண்டார்.

11. அந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் கிராம நிர்வாக அலுவலர் சொன்னார். நான் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தேனா என்றால் அதற்காக நான் விசாரிக்கவில்லை. இந்த சொத்து சம்பந்தமாக பேசிய போது அந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துமாணிக்கம் என்னிடம் குத்தகைக்கு நிலம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னென்ன ஆவணங்களை முத்து மாணிக்கத்திடம் கொடுத்தேன் என்றால் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட நகல்களை கொடுத்தேன். எதற்காக கொடுத்தேன் என்றால் விற்பனை செய்து தரக் கொடுத்தேன்.

12. என்ன விலைக்கு விற்பனை செய்து தர கேட்டேன் என்றால் நான் விலை அவரிடம் சொல்லவில்லை. நான் அந்த நகல்களை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் முத்துமாணிக்கம் வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். தேதி மாதம் நினைவு உள்ளதா என்றால் இல்லை. 2012 ஆம் ஆண்டு கொடுத்ததாக நினைவுள்ளது. அப்போது அங்கு யாரெல்லாம் இருந்தது என்றால் அவரது மனைவி இருந்தார். அந்த விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. சொத்தை முத்து மாணிக்கம் விற்பனை செய்து கொடுத்து விட்டாரா இல்லை. நகல் ஆவணங்களை திருப்பி

கொடுத்து விட்டாரா என்றால் கொடுத்துவிட்டார். எப்போது கொடுத்தார் என்றால் மூன்று மாதங்கள் கழித்து கொடுத்திருப்பார். இந்த வழக்கிற்கும் நான் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கும் முத்துமாணிக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

13. வழக்கு சொத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நான் 11 வது பிரதிவாதியாக முத்து மாணிக்கத்தை சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. 28/07/1993 நான் கன்னியப்பன் நாயக்கரிடமிருந்து கிரையம் பெற்றபோது சொத்து விவரங்களை வாங்கித் தெரிந்து கொண்டேனா என்றால் சொத்தின் விஸ்கிரீனத்தை தெரிந்து கொண்டு தான் வாங்கினேன். புல எண் எனக்கு தெரியவில்லை. அதற்கு கிரையத்தொகை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் அந்த கிரைய தொகையை ஏக்கர் கணக்கில் கொடுத்தேனா அல்லது சென்ட் கணக்கில் கொடுத்தேனா என்றால் சென்ட் கணக்கில் தான் கொடுத்தேன். என் மீது யார் நில அபகரிப்பு வழக்கு கொடுத்தது என்றால் முத்து மாணிக்கம் குடும்பத்தார் தான் கொடுத்தார்கள். புல எண் தவறாக உள்ள விவரம் எனக்கு தெரிய வந்த பிறகு ஏன் பிழை திருத்தம் ஆவணம் நான் ஏற்படுத்தவில்லை என்றால் எனக்கு அது குறித்த விவரம் தெரியவில்லை.

14. நான் சாட்சியம் அளித்தது போன்று பத்திரத்தில் எழுத்து பிழை ஏற்படவில்லை என்றாலும் நான் உண்மையில் அந்த சொத்தை கிரையமே பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளித்தது போன்று உண்மையில் பிழை ஏற்பட்டிருந்தால் அதை சரி செய்ய நான் அப்போது திருத்தல் ஆவணம் ஏற்படுத்தி இருப்பேன் என்றால் சரியல்ல.

23 ஆண்டுகள் கழித்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தை அவர்கள் கிரயம் வாங்கிய விவரம் தெரிந்து நான் இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு கால வரம்பு சட்டதின் கீழ் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. புல எண். 45/6 ல் உள்ள 29 சென்ட் சகுந்தலம்மாள் என்பவருக்கு தான் சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளன என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்திற்கும் மேற்கண்ட சங்கதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d – K.Nilavarasan, 12.11.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.